விலை சதம் 25

# காந்தீயம்

**கிராமசேவை**

தொண்டு செய்ய விரும்புகிறவன் கிராமங்களை நாடிச்சென்று, அங்கு தோட்டியாகவும், நூல் நூற்பவனாகவும், காவற்காரனாகவும், உபாத்தியாயராகவும் ஏக காலத்தில் தன்னை உருவாக்கிக் கொள்ளவேண்டும்.

— மகாத்மா காந்தி.

UNIVERSITY OF JAFFNA LIBRARY PERIODICALS DIVISION 2006

மலர் 15 | காந்தி நிலையம் - உருத்திரபுரம் (காந்தி ஆண்டு 108) 1978 மார்ச் | இதழ் 6

## கிராமம் திரும்பிச் செல்வோம்

### ஜயப்பிரகாஷ் நாராயண் உரை

சுதந்திரம் அடைந்த பின்னர் அணைகள் கட்டவும் மின் உற்பத்திக்காகவும் திட்டமிட்டுச் செயலாற்றினோம். ஆனால் கூடவே குடிசைத் தொழில்களை வளர்க்க நாம் தவறிவிட்டோம். நாட்டின் பொருளாதாரம் முழுவதும் விவசாயத்தை மட்டுமே சார்ந்திருக்கிறது. எனவே கிராமங்களின் நிலை சீர் திருந்தாதவரை நாட்டின் நிலை மாறப்போவதில்லை. ஆகவே 'கிராமம் திரும்பிச் செல்வோம்' என்பதே இனி நமது கோஷமாக இருக்கவேண்டுமெனக் கூறுகிறார் ஜயப்பிரகாஷ்நாராயண்.

மக்கள் நலனுக்கான பணிகள் பல நடந்துள்ளன. ஆயினும் இன்னும் எவ்வளவோ செய்யவேண்டியுள்ளது. நம்முடைய இறுதி லட்சியத்தை, முகாமை அடைய இன்னும் தொலை தூரம் நடந்தாகவேண்டும். கிராமங்களின் நிலை சீர்திருந்தாதவரையில் நாட்டின் சித்திரம் (நிலை) மாறப்போவதில்லை. ஆனால் இது பெரிய கடினமான பணி என்பதில் ஐயமில்லை. எனவே இனி நமது கோஷம் 'கிராமம் திரும்பிச் செல்வோம்,' 'கிராமத்தை நோக்கி' என்பதாக இருக்கவேண்டும். கிராமங்களின் நிலை சீர் திருந்தத் தொடங்கினால் நகரங்களின் நிலை தானாகவே சீர்திருந்திவிடும். இந்த இலட்சக்கணக்கான கிராமங்களில்தான் உண்மையான இந்தியாவே இருக்கிறது.

நாட்டு மக்களும், தலைவர்களும் சமுதாய விஞ்ஞானிகளும் கிராமங்களைப் புனரமைக்கும் பணியில் முழு மனதுடன் ஈடுபடவேண்டுமென்று நான் விரும்புகிறேன். இப்பணி அரசினுடையதல்ல. அரசால் மட்டும் தனியே இதைச் செய்யமுடியாது என்பதை நினைவிற் கொள்ளவேண்டும். எல்லாரும் இப் பணியில் ஈடுபடவேண்டும். நிறுவனங்கள் முன்வரவேண்டும். மக்களாட்சியில் மக்கள் விழிப்புற்று செயலில் ஈடுபடவில்லையெனில், அது வெற்றிபெற முடியாது. சிறு துளி பெருவெள்ளம். எனவேதான் நான் மக்கள் குழுக்களை அமைப்பதுபற்றி கூறிவந்திருக்கிறேன். கிராமநிலையிலிருந்து மேல்நோக்கி இப் பணி வளர்ந்து இதுபோன்ற குழுக்கள் அமைந்து அதன் பிரதிநிதிகள் மூலம் இப்பணிகள் நடக்குமானால் நன்றாக இருக்கும். மக்கள் ஒன்று சேர்ந்து தங்களது பிரச்சினைகளைத் தீர்ப்பதுபற்றி கவனம் செலுத்தாதவரை, குறிப்பிட்டு கூறிக்கொள்ளத்தக்க எந்த மாற்றமும் ஏற்படாது.

மக்களே தங்களது பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ள உதவுவது அரசின் வேலை: அதுபோன்ற உதவி அரசுதரப்பிலிருந்து மக்களுக்குக் கிடைக்கும். ஆனால் அந்த உதவி எப்படி இருக்கும்? பாலில் உறை மோர் ஊற்றுவதைப் போன்றிருக்கும். இப்போது மக்கள் உதாசீனமாக இருக்கிறார்கள். தங்கள் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண்பதுபற்றி அவர்களது கவனம் செல்லவில்லை. அரசே எல்லாவற்றையும் செய்துவிடும் என்ற நிலையில் அவர்கள் இருக்கிறார்கள். மனத்தில் அவர்களது ஆற்றலின் அறிவை விழிப்புறச்செய்து, அவர்களை தற்சார்பு நிலையை நோக்கி அழைத்துச் செல்வது இன்றைய முக்கிய தேவை. இதற்கு அதிகாரத்தையும் தொழில்களையும் பரவலாக்கவேண்டியது அவசியமாகும்.

என்னுடைய உடல் நிலை சரியாக இல்லை. இருமுறை மரணத்தின் வாயில் வரை சென்று பிழைத்து விட்டேன். எனினும் இன்னும் எவ்வளவு காலம் உங்கள் மத்தியில் இருப்பேன் என்று கூற இயலாது. என் மூலமாக எந்தப் பணியைச் செய்ய ஆண்டவன் விரும்புகிறான் என்றும் எனக்குத் தெரியாது. எனது இறுதி மூச்சு வரை மக்களாட்சியின் வேர்களை, அடித்தளத்தை வலுப்படுத்திக்கொண்டே காந்தியின் கிராம ராஜ்யக் கனவை பூர்த்தி செய்யும் பணியிலேயே நான் ஈடுபட்டிருப்பேன்.

(ஸ்ரீ ஜயப்பிரகாஷ் நாராயண் அவர்களின் கருத்துரையை இலங்கை மக்கள், சிறப்பாக தமிழ் மக்கள் ஆழ்ந்து சிந்திப்பார்களாக! — ஆசிரியர்.).

---

## ஜெ. பி. முடிவு!

தாம் இதுவரை தொடர்புகொண்டிருந்த எல்லா ஸ்தாபனங்கள், கழகங்களின் தொடர்புகளைத் துண்டித்துக் கொள்ள திரு. ஜெயப்பிரகாஷ் நாராயண் முடிவு செய்துள்ளார்.

'இந்த திட்டங்களில் நான் தொடர்ந்து அக்கறைகொண்டிருப்பேன் என்று நான் சொல்லத்தேவையில்லை. எனது பொதுவான யோசனையும், புத்திமதியும் தேவையானபோது கிடைக்கும்' என்று கூறியுள்ளார்.

★ காந்தீய - சர்வோதய தத்துவ திங்கள் வெளியீடு ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காந்தீயம்

காந்தி நிலையம்
உருத்திரபுரம், [இலங்கை]
தொலைபேசி; 254
(கிளிநொச்சி)
காந்தி ஆண்டு 108
1978 மார்ச்சு


## கிராம சமுதாயம்

ஒரு நாட்டில் உள்ள வன்செயல்களுக்கும், கிராமங்கள் பட்டினங்கள் ஆகியவற்றிற்கு இடையே உள்ள ஏற்றத் தாழ்விற்கும் நேரடியான சம்பந்தமுண்டு. பட்டினங்கள் வளர வளரச் சமூக அமைப்பில் பெரும் மாற்றங்கள் ஏற்படுகின்றன. நகர அமைப்பே மனிதனை மனிதன் சுரண்டி வாழும் ஆடம்பரத்திற்கு ஒரு குறியீடாக அமைந்துள்ளது. பொன்னும் புகழும் பெற்று அவற்றை இழந்துவிடாது பிடித்திருக்க விழிப்போடு பாடுபடுவோரும், அவை இல்லையே என்று ஏங்கி அவற்றை எதுவகையிலேனும் பெற்றுவிடத் துடிப்போரும் ஆகப் பலவகைப்பட்ட மனிதரே பட்டினங்களில் வாழ்கிறார்கள். பகட்டான வாழ்வு, சமூகத்தில் உயர்ந்த பதவி, அழகான வீடு, மற்றையவர் கண்டு மனம் மயங்கும் அளவினதான செல்வக் கொழிப்பு ஆகியவை எல்லாம் மறைமுகமான இம்சை வழிகளேயாம். மற்றையவர் ஏழ்மையில் வாட அவர் கண் முன்னே ஆடம்பரத்தைக் கொட்டிக் காட்டல் மிக மோசமான பாபச் செயலாகும்.

இந்த ஆடம்பர வாழ்வு மற்றையவர் உழைப்பையும் செல்வத்தையும் கறந்து தான் அனுபவிக்கக் கூடிய ஒன்றாகும். சமய வழிபாட்டிற்கும் தான தருமத்திற்கும் செலவழிப்பவர்களுள்ளும் பலபேர் தமக்குக் கீழ் வேலை செய்பவர்களைக் கறந்தே அவ்வாறு செய்கின்றனர். இவர்கள் பகட்டான வாழ்வைக் கண்டு கிராமத்திலுள்ளவர்களும் இவர்களைப் போல் வாழ விரும்புகின்றனர்; அங்கலாய்க்கின்றனர். பட்டினவாசிகள் கடைப்பிடித்த குறுக்குவழிகளை இவர்களும் இன்னும் மிகமோசமான முறையில் கடைப்பிடிக்க முயல்கின்றனர். இதனால் போட்டியும் வன்செயல்களும், சூதும் களவும் ஏற்படுகின்றன.

இந்த ஆடம்பர வாழ்வுப் போட்டியினாலும் இலேசான காசைத் தேடும் ஆசையாலும் பலர் பட்டினங்களை நோக்கிப் படை எடுக்கின்றனர். சுகவாழ்வை விரும்புவோரும் சூதில் வல்லவரும் பட்டினங்களை நாடி வந்துவிட, வஞ்சகம் அற்றோரும் சூதில் இயல்பில்லாதவரும் கிராமங்களில் தங்கி அல்லற்படுகின்றனர்.

இதனால் நடப்பது என்ன? இம்சை வழியாலும், சூது வழியாலும் பணம் தேடமுடியாத அப்பாவி மக்கள் கிராமங்களில் தங்கிவிடுகிறார்கள். இவர்கட்குப் போதிய சுகாதார வசதிகள் இல்லை; பொருளாதார வேளாண்மை முயற்சிகளில் அறிவுரை கூறி வழிகாட்ட வல்லவர் இல்லை. கிராமிய வாழ்விலும் பட்டின வாழ்வு உயர்ந்தது, உத்தியோகம் உயர்ந்தது என்ற எண்ணம் பரவலாகிவிட்டது.

கிராமம் பட்டினம் என்ற வேறுபாடு இடத்தை மட்டும் பொறுத்ததல்ல. பட்டினங்களுள்ளும் கிராமிய நிலையிலுள்ளவர்களும் கிராமங்களில் பட்டினச் சொகுசுடன் வாழ்பவர்களும் இருக்கிறார்கள். எங்கு எவர் படாடோபமாக, செல்வக் கொழிப்பை அள்ளி எறிந்து வாழுகிறார்களோ அவர்கள் ஏழைமக்களுக்கு அளவில்லாத இம்சை செய்பவர்கள் ஆவர்.

என்று பட்டினங்கள் கிராமங்கள் என்ற பேதம் மறையுமோ, என்று உலகமே ஒரு கிராம சமுதாயமாக; எளிய அறிவுடைய வாழ்வை, மற்றையோரை வருத்தி வாழாத வாழ்வை மேற்கொள்ளுமோ அன்றுதான் உலகம் ஓர் உலகமாக மாறும்!

— இ. இ.

## அன்பர் தபால்

'காந்தீயம்' திங்கள் வெளியீடு எமக்கு ஒழுங்காகக் கிடைத்து வருகிறது.

"கடுகு சிறிது; காரம் பெரிது" என்பது போல் தங்கள் பத்திரிகை அளவில் சிறிதாக இருந்தாலும், மிக சிறப்பான முறையில் காந்தீய செய்திகளை இனிய தமிழில் உள்ளடக்கி வெளிவருகிறது.

'ஹரே கிருஷ்ண' இரா. நவசீலன்
கொழும்பு-13.

## முழுமைப் புரட்சி நிதி

பட்னா காந்தி மைதானத்தில் பெப்ரவரி 12 ஆம் தேதி ஆசார்ய கிருபளானி தலைமையில் நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டத்தில் ஜெ. பி. யின் 75 ஆண்டு நிறைவை முன்னிட்டு அவரைக் கவுரவிக்கும் முறையில் நாடு ரூ. 90 இலட்சத்திற்கான நிதியை ஜயப்பிரகாஷ் நாராயணனிடம் அளித்தது.

நிதியைப் பெற்றுக்கொண்டதும் மன நெகிழ்ச்சியுடன் ஜயப்பிரகாஷ் நாராயண், நாடு தன்மீது செலுத்தும் அன்பு கண்டு தான் பெரிதும் பரவசமாகிவிட்டதாகவும் இந் நிதி முழுமைப் புரட்சியின் குறிக்கோளை நிறைவேற்றப் பயன்படுத்தப்படும் என்றும் கூறினார்.

அவர் மேலும் தொடர்ந்து பேசியதாவது:

நான் எப்போதும் மக்கள் சேவைக்குத் தயாராக இருந்து வருவேன். நிதி சேகரிப்புக் குழு இந் நிதியை புதிய சமூதாய அமைப்பு, வாழ்க்கையில் புதிய மதிப்பீடுகள் உருவாக்குதல், ஆகிய பணிகளில் மக்களின் விருப்பத்திற்கேற்ப பயன்படுத்தும்.

சமுதாயத்தின் ஒவ்வொரு துறையிலும் அடிப்படையான மாற்றம் ஏற்படவும் எல்லாவிதத்திலும் சுதந்தரமாக முன்னேறுவதன் மூலம் தான் புதிய சமுதாயத்தை உருவாக்க முடியும். முழுமைப் புரட்சியின் குறிக்கோளும் இதுவேதான். கல்வி, அரசியல் ஆட்சி மற்றும் சமுதாயத்தில் என்னென்ன மாற்றம் கொண்டுவரவேண்டுமென ஆராய்ந்து அப்பணிகளை நிறைவேற்றுவதற்கு இந் நிதி பயன்படுத்தப்படும்.

★ சர்வோதய நற் சமுதாயத்தினை

# சம்பத்துத்தானம்

அகில இலங்கைக் காந்தி சேவா சங்க கொழும்புக் கிளையின் நிர்வாகத்தின் கீழுள்ள இரத்மலானை - சர்வோதய நிகேதனம் மாணவர் இல்லத்திற்கு 1977 சனவரி முதலாந்திகதி தொடக்கம் திசெம்பர் 31ம் திகதி வரை (12 மாதங்கள்) சம்பத்துத்தானம் அளித்த அன்பர்கள்.

**பசல்ஸ் ஒழுங்கை**

| | | |
|---|---|---|
| திருமதி இ. முதலியார் | 12 | 00 |
| ,, யோ. தியாகராஜா | 4 | 00 |
| ,, க. சுப்பிரமணியம் | 5 | 43 |
| ,, நவரத்தினம் | 5 | 50 |
| ,, ப. தியாகராஜா | 5 | 50 |
| ,, நி. திருநாவுக்கரசு | 8 | 00 |
| ,, பி. வெற்றிவேலு | 10 | 00 |
| ,, எஸ். திருநாவுக்கரசு | 3 | 00 |
| ,, ஏ. எஸ். சின்னத்தம்பி | 8 | 00 |
| ,, ம. சதானந்தன் | 1 | 00 |
| ,, சரவணபவன் | 1 | 00 |
| ,, கே. நவரத்தினம் | 10 | 00 |
| ,, ல. முருகையா | 2 | 00 |

**பம்பலப்பிட்டி மாடி வீடுகள்**

| | | |
|---|---|---|
| திருமதி. விநாயகமூர்த்தி | 10 | 00 |
| ,, ஆறுமுகம் | 9 | 00 |
| ,, இராசசேகரம் | 1 | 00 |
| ,, செல்வத்துரை | 4 | 00 |
| ,, ஆர். நல்லதம்பி | 7 | 00 |
| ,, சுப்பிரமணியம் | 54 | 00 |
| ,, ஏ. சபாநாயகம் | 2 | 00 |
| ,, எஸ். சச்சிதானந்தம் | 5 | 00 |
| ,, என். இராஜேந்திரம் | 1 | 00 |
| ,, எஸ். இராஜலிங்கம் | 5 | 00 |
| ,, எஸ். வடிவேலு | 1 | 00 |

**மெல்போன் அவென்யூ**

| | | |
|---|---|---|
| ,, க. சின்னத்தம்பி | 14 | 00 |
| ,, ந. பத்மநாதன் | 23 | 00 |

**47 ஆவது ஒழுங்கை**

| | | |
|---|---|---|
| திருமதி. தவமணி | 13 | 50 |
| ,, அருளம்பலம் | 10 | 00 |
| ,, இரத்தினசபாபதி | 14 | 00 |
| ,, மாணிக்கம் | 18 | 00 |
| ,, ச. தம்பிப்பிள்ளை | 10 | 00 |

**லோறன்ஸ் றோட்**

| | | |
|---|---|---|
| திருமதி. விஜயா. பெரியசாமி | 10 | 00 |
| ,, இ. கனகலிங்கம் | 6 | 00 |
| ,, தி. மகாதேவன் | 1 | 00 |
| ,, நா. மார்க்கண்டு | 3 | 00 |
| ,, ம. ரகுபதி | 14 | 00 |
| ,, லலிதா, குகதாஸ் | 5 | 00 |
| திருமதி த. தங்கராசா | 1 | 00 |
| ,, பு. நடராஜா | 8 | 00 |
| ,, பு. சண்முகநாதன் | 9 | 00 |
| ,, நா. பஞ்சரத்தினம் | 10 | 50 |

**உலக பௌத்த நிலைய வீதி**

| | | |
|---|---|---|
| திருமதி. ம. ரூபசிங்கம் | 3 | 00 |
| ,, உமா. குமாரசாமி | 4 | 00 |
| ,, யோ. சண்முகராஜா | 16 | 00 |
| ,, த. கனகரத்தினம் | 7 | 00 |
| ,, தெ. மகாலிங்கம் | 6 | 00 |
| ,, தி. பொன்னம்பலம் | 18 | 00 |

**ஈ. ஏ. கூரேமாவத்தை**

| | | |
|---|---|---|
| திருமதி. இ. செல்லையா | 9 | 00 |
| ,, சி. சிவராஜா | 11 | 00 |
| ,, அ. செல்வச்சந்திரன் | 1 | 00 |
| ,, ச. நவரத்தினராஜா | 6 | 00 |
| ,, ம. சோமசுந்தரம் | 20 | 00 |
| ,, டெ. பி. மாட்டின் | 4 | 00 |

**42 ஆவது ஒழுங்கை**

| | | |
|---|---|---|
| திருமதி. எஸ். தில்லைநடராஜா | 1 | 00 |
| ,, க. சண்முகநாதன் | 11 | 00 |
| ,, வே. முருகேசு | 11 | 00 |

**வெள்ளவத்தை**
**விவேகானந்தா வீதி**

| | | |
|---|---|---|
| டாக்டர். பி. அருமைநாயம் | 50 | 00 |

**ஈ. எஸ். பெர்னாந்து மாவத்த**

| | | |
|---|---|---|
| டாக்டர். செல்வி. முத்துவேலு | 5 | 00 |

**கொட்டாஞ்சேனை**

| | | |
|---|---|---|
| திரு. வீ. வரதசுந்தரன் | 50 | 00 |

**கொழும்பு**
வீடமைப்பு திணைக்களம்

| | | |
|---|---|---|
| திரு. சி. அ. நாகேந்திரன் | 28 | 22 |

**கொள்ளுப்பிட்டி**

| | | |
|---|---|---|
| திரு. இ. ஸ்ரீஹரி | 5 | 00 |

**பம்பலப்பிட்டி**

| | | |
|---|---|---|
| செல்வி. கஜனி- சந்திரசேகரம் | 1 | 00 |
| ,, இவோன்- சவரிமுத்து | 1 | 00 |

**தெகிவளை**

| | | |
|---|---|---|
| திருமதி. சுப்பிரமணியம் | 10 | 00 |

**வத்தளை**

| | | |
|---|---|---|
| திருமதி. லலிதா-எமில் திஸவிரசிங்கி | 12 | 00 |

**நுவேகொட**

| | | |
|---|---|---|
| திருமதி. ம. குமாரசாமி | 65 | 00 |

**கைதடி**

| | | |
|---|---|---|
| திரு. க. செல்வராசா | 5 | 00 |
| கொழும்பு-தெற்கு வட்டார ஆசிரியர் கருத்தரங்கம் | 3 | 00 |
| ஓர் அன்பர் | 1 | 25 |

**கொழும்பு-ஆமர் வீதி**

| | | |
|---|---|---|
| திரு. எஸ். எஸ். சடாட்சரம் | 80 | 00 |

**கொழும்பு. 5ஆம் குறுக்கு தெரு**

| | | |
|---|---|---|
| திரு. தா. வெ. சசிகுமார் | 10 | 00 |

## புதிய பத்திரிகைகள்

### மலைக்குருவி

மலையகத்திலிருந்து திரு. இரா. கணேசதாசனை ஆசிரியராகக் கொண்டு வெளியாகும்மலைக் குருவி கிடைக்கப் பெற்றோம்.

மலையக மக்களின் மேம்பாடுகளுக்காகப் பாடுபடுவதாகக் கூறும் இப் பத்திரிகை முழுக்க முழுக்க ஒரு அரசியல் பத்திரிகையாகவே காணப்படுகிறது.

### தமிழ்வாணன்

மொழிவாணனை ஆசிரியராகக் கொண்டு மலர்ந்துள்ளது தமிழ் வாணன்.

இவ்விதழில் ஆசிரியர் தமிழ் வாணன் மீது கொண்டுள்ள பற்று பக்கத்துக்குப் பக்கம் பளிச்சிடுகிறது. கேள்வி— பதில், முட்டை — மிளகு மருமம் என்ற துப்பறியும் தொடர் கதை, தமிழ்வாணனது சிறு கதை என பல படிக்கக்கூடிய அம்சங்கள் இடம் பெற்றுள்ளன.

### "ஹரே கிருஷ்ண"

அகில உலக கிருஷ்ண பக்தி இயக்க வெளியீடான ஹரே கிருஷ்ண கிடைக்கப் பெற்றோம்.

தாம் சார்ந்துள்ள இயக்கத்தின் பெருமையை கூறும் பல கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன.

### மின்விழி

ஈழத்தில் கலை, இலக்கியப் பத்திரிகைகள் குறைவாக உள்ளதை ஈடு செய்யும் நோக்கத்துடன் 'மின்விழி' வெளி வந்துள்ளது.

திரு. இ. பிரேமகாந்தனை ஆசிரியராகவும் திரு. சுரேஷ் சுவாமிநாதனை இணை ஆசிரியராகவும் கொண்டு வெளிவந்துள்ள இந்த இதழிலே சிறு கதைகள், இலங்கை சினிமா செய்திகள் முதலிய பல அம்சங்கள் இடம் பெற்றுள்ளன.

**நிர்மாணம் செய நித்தமும் உழைப்போம் ★**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வினோபா

## விடை அளிக்கிறார்

**வினா:** தொழிற் சங்கங்கள் பற்றி உங்கள் கருத்தென்ன? பல சங்கங்கள் இருக்கின்றன. வேலை நிறுத்தங்கள் முதலியன நடக்கின்றன.

வினோபா: பல தொழிற் சங்கங்கள் அரசியல் கட்சிகளின் ஆதிக்கத்திலுமிருக்கின்றன. எனவே எல்லா சங்கங்களையும் இணைந்து செயல்படுமாறு கூறவேண்டும்.

வினா: தொழிலாளர் கல்வி எவ்வாறிருக்க வேண்டும்?

வினோபா: இன்று அளிக்கப்பட்டுவரும் கல்வி முற்றிலும் கெட்டுப்போய் விட்டது. கல்வியில் சீர் திருத்தம் செய்வது மிகவும் அவசியம். மக்களுக்கு எழுதப் படிக்கத் தெரியாவிட்டால் அது ஒன்றும் பெரிய விஷயமல்ல. கபீர் தாஸ் கூட படிக்கவில்லை, எனவே எழுதுவதோ அல்லது படிப்பதோ ஒன்றும் பெரிதல்ல. கிராமம் ஒன்றுபட வேண்டும். கிராமம் ஒரு குடும்பமாகவும் மாநிலம் ஒரு மாவட்டமாகவும் இந்தியா மாநிலமாகவும் உலகம் ஒரு நாடாகவும் ஆகவேண்டும். எனவே தான் நான் ஜய் ஜகத் என்று கூறினேன்.

வினா: தொழில்களில் தொழிலாளர்களுக்கு பங்கிருக்க வேண்டுமா?

**வினோபா:** ஆம். அவர்களும் பங்குதாரராக வேண்டும். தொழிலாளர்களை ஆலைகளில் வேலை செய்பவர்களையும் வயற்காட்டிற்கு அழைத்துச் செல்லவேண்டும். நெசவாளர் எட்டு மணிநேரம் நெய்துகொண்டிருப்பதற்குப் பதிலாக இரண்டு- மூன்று மணிநேரம் வயலில் வேலை செய்துவிட்டு ஐந்து மணி நேரம் நெசவுத் தொழிலில் ஈடுபடட்டும். முன்னாள் பிரதமர் இந்திரா காந்தியைக்கூட மூன்று மணிநேரம் வயலில் வேலை செய்துவிட்டு மீதிநேரத்தில் பிரதமருக்குரிய பணியைச் செயுமாறு நான் கூறினேன்.

தர்மகர்த்தா தத்துவம் பற்றி காந்திஜி கூறினார். அதை அமல் படுத்தவேண்டும். எத்தனை பகுதி முதலாளியுடையது. தொழிலாளருடையது எவ்வளவு, மக்களுடைய பங்கு எவ்வளவு என்பதுபற்றிய கணக்கு காந்திஜி கொடுத் திருந்தார். அவ்வாறு செய்ய வேண்டும்.

வினா: நல்வாழ்க்கை என்று எதைக் கூறுகிறோம். நல்ல முறையில் வாழ எது உதவி செய்யும்? நமது இளைஞர்களை முழுமனிதனுக்க கல்வியில் என்னென்ன கொள்கைகளைப் பின்பற்றவேண்டும்?

வினோபா: உங்கள் வினாவிற்கு மூன்று சொற்களில் நான் விடையளிக்கிறேன், சமுதாயம், கல்வி ஆகிய இவ்விரண்டிற்கும் சத்தியம், அன்பு, கருணை அடிப்படையாக இருக்க வேண்டும், கருணை என்பதற்குப் பொருள் துன்புற்றோருக்கு உதவுவதும் அவர்களது துன்பத்தைக் கண்டு நாம் வருந்துவதும் தான். பிறருடைய சுகத்தைக் கண்டு நாம் சுகப்படுவதுதான் அன்பிற்கு இலக்கணம். எந்த சமயத்தில் எது நமக்கு எவ்வாறு தோன்றுகின்றதோ அதை அப்படியே வெளியிடுவதுதான் சத்தியமாகும். உங்கள் கருத்து ஒருவேளை மாறிவிட்டதெனில் அதை மாற்றிக் கொள்ளவும் தயாராக இருக்க வேண்டும்.

## அன்புத் தாகம் வேண்டும் சக்தி

தாகம் வேண்டும் தாயே — அன்புத்
தாகம் வேண்டும் சக்தி.

மோகம் வேண்டாம் தாயே — எதிலும்
மோகம் வேண்டாம் தாயே

போகப் பொருளை நாடி — உள்ளம்
புலனால் அரிப்புற்றேங்கி

வேகம் கொண்டு நாளும் — வீணாய்
விரக்தி யுற்று மாய்ந்து

நாகம் போலச் சீறி — நாவால்
நல்லோர் நெஞ்சைக் கீறி

தேகம் மெலிந்து சோர — முகம்
தேஜஸ் இழக்தே வாடி

ஆகாச் செயலை நினைந்து — நெஞ்சம்
ஆறாத் துயரில் மூழ்கி

நோகா நிலையை அடைய — நிதம்
நோன்பு நோற்க அருள்வாய்

யோகத் திருத்தி நெஞ்சை — என்றும்
ஒளியாம் நின்னை வணங்க

ஏக நாயகியே — எனக்(கு)
இன்னருளை ஈவாய்

★ ★ ★ ★

பக்தி நிறைந்த ஞானம் — என்றும்
பரிந்தே அருள்வாய் தாயே

மக்கள் துன்பம் போக்கி — பாரில்
மாண்பும் பண்பும் விளங்க

சிக்கல் மிகுந்த வாழ்வில் — மாந்தர்
சீலம் தன்னைப் பேண

பக்கத் திருந்து நாளும் — பணி
பணிவாய்ப் புரிந்து மகிழ

தக்கன் மகளே தருவாய் — தண்மைத்
தயையை அன்னைத் தாயே

"கரவைகிழார்."

இப் பத்திரிகை அகில இலங்கைக் காந்தி சேவா சங்கத்திற்காக உருத்திரபுரம் திரு. சி. க. வேலாயுத பிள்ளை அவர்களால் இரத்மலானை காந்தி சேவா சங்க சர்வோதய அச்சக உபகரணங்களின் உதவியுடன் கொழும்பு — குமரன் அச்சகத்தில் அச்சிடப்பட்டது. இலங்கையில் புதினப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org